# 10.தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம்

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம், “நிறுவனங்கள் பதிவுச் சட்டம் 1860”-ன் கீழ் பதிவு செய்யப்பட்டது. தரமான பாடநூல்களை தேவைப்படும் அனைவருக்கும் உரிய காலத்தில் எளிதாகக் கிடைக்கச் செய்ய வேண்டும் என்பது இக்கழகத்தின் நோக்கமாகும்.

## 10.1. தொலை நோக்கு

அதிகரிக்கும் தேவைக்கேற்ப தரமான மேம்பட்ட அச்சுத் திறனுடன் கூடிய பாட நூல்களை வழங்குதல்.

## 10.2. பாடநூல்களின் விவரம்

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம் 1 முதல் 12ஆம் வகுப்பு வரையில் 484 தலைப்புகளில் பாடநூல்களை (தொகுதி-1 மற்றும் தொகுதி 2 உட்பட) அச்சிடுகிறது. பாடநூல்கள் மற்றும் தொழிற் கல்விக்கான பாடநூல்கள் மற்றும் ஆசிரியர் பட்டய பயிற்சிக்கான வளநூல்கள் ஆகியவை பாடநூல் கழகத்தால் அச்சடிக்கப்பட்டு வழங்கப்படுகின்றன. அதன் விவரம் பின்வருமாறு:

- அனைத்து மாணவர்களுக்கும் அனைத்துப் பாடநூல்களையும் வழங்குதல்.
- மேல்நிலை முதல் மற்றும் இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கான தொழிற்கல்வி பாடநூல்கள் வழங்குதல்.

- அரசு பல்தொழில்நுட்ப கல்லூரிகளில், முதல் மற்றும் இரண்டாம் அரையாண்டு பருவங்களில் பயிலுகின்ற மாணவர்களுக்கான பாடநூல்கள் வழங்குதல்.
- ஆசிரியர் பட்டயப் பயிற்சி மாணவர்களுக்கான வளநூல்கள் வழங்குதல்.
- ஆதிதிராவிடர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைகளின் கீழ் இயங்கும் பள்ளிகளில் 10 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு சிறப்பு வழிகாட்டி நூல்கள் வழங்குதல்.
- பெற்றோர் ஆசிரியர் கழகத்திற்காக வினா வங்கி, மாதிரி வினாவங்கி மற்றும் தீர்வு நூல்கள் வழங்குதல்.

## 10.3. இலவசப் பாடநூல் அச்சிடுதல்

அரசுப் பள்ளிகள் மற்றும் அரசு மான்யம் பெறும் பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும், மாநிலப் பாடத்திட்டத்தினை பின்பற்றும் சுயநிதிப் பள்ளிகளில் தமிழ் வழியில் பயிலும் மாணவர்களுக்கும் பாடநூல்கள் அச்சிட்டு இலவசமாக விநியோகம் செய்யப்படுகின்றன. ஆதிதிராவிடர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மை நலத்துறை, சமூக நலத்துறை மற்றும் வனத்துறையினால் நடத்தப்படும் பள்ளிகளில் 1 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கான அனைத்துப் பாடநூல்களும் இலவசமாக தமிழ்நாட்டுப் பாடநூல் கழகத்தால் அச்சடிக்கப்பட்டு இக்கழக வட்டார அலுவலகங்கள் மூலமாக அந்தந்தத்துறைகளுக்கு நேரிடையாக வழங்கப்படுகின்றன.

## 10.4. பிறமாநிலங்களில் தமிழில் பயிலும் மாணவர்களுக்கு இலவசப் பாடநூல்கள் வழங்குதல்

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம் மும்பை மாநகராட்சி, டெல்லி தமிழ்ச்சங்கம், அகமதாபாத் நகராட்சி, அந்தமான் நிகோபார் நிர்வாகங்கள், கொச்சி தமிழ் ஐக்கிய சங்கம் போன்ற பிற மாநிலங்களில் உள்ள தமிழ் மாணவர்களின் நலனுக்காக ஆண்டு தோறும் பாடநூல்களை அச்சிட்டு இலவசமாக வழங்கி வருகிறது.